## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை மாற்ற வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்களை சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 10,019,769 கிரயமான 14 அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 2,093,728 கிரயமான மல்டிமீடியா பல்லூடகம் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்தறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்வதற்கும் மீள் மதிப்பீடு செய்வதற்கும் எடுப்பதாக | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள ஆகக்கூடிய காலப்பகுதிக்குள் கிடைக்கும் பாடநெறிக் கட்டணங்களை மாத்திரம் வருமானமாக இனங்காண்பது நிறுவகத்தின் கொள்கையாக இருந்த போதும் 09 பாடநெறிகளுக்குரிய ஆகக்கூடிய காலப்பகுதியில் கிடைக்காதிருந்த ரூபா 16,800,252 ஆன பாடநெறிக் கட்டணங்கள் பெறவேண்டிய வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது | ஆகக்கூடிய காலப்பகுதியை விஞ்சிய இதுவரை கிடைக்காத பாடநெறிக் கட்டணங்களான ரூபா 16,800,252 தொகையை நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிப்பதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவுசெய்யப்பட்ட மாணவர்களிடமிருந்து பெறவேண்டிய நிலுவை பாடநெறிக் கட்டணங்கள் ரூபா 73,548,307 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 23,087,364 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு தவறியிருந்தது. | காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக மாணவர் களிடமிருந்து அறவிடுவதில் தாமதம் ஒன்ற காணப்படுவதாக | பெறவேண்டிய பாட நெறிக் கட்டணங்களை குறித்த காலப்பகுதிக்குன் அறவிடப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 880 | பிணைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய 04 உத்தியோகத்தர்களால் பிணை வைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைப்புச் செய்ய பிணை வைப்புத் தொகையை தீர்மானிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளதாக. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்க எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு | 2020 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை கல்வி அமைச்சின் மூலம் அறிவிக்கும் தினமொன்றில் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | தயார்படுத்தப்படுவதாக |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 70,034,596 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 43,163,553 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,871,043 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு உள்ளக வருமான உழைப்பு ரூபா 32,314,388 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பட்டப்பின் படிப்பு 58 பாடநெறிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இப்பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்குரிய தகவல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு 2019 திசெம்பர் 04 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது குறித்த பாடநெறிகளை மீளாய்வு செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரப் பாதுகாப்பு பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) அடிப்படை பட்டமொன்று இல்லாத மாணவர்கள் சுற்றுலா மற்றம் முதுமாணி பட்டப்பின் படிப்பு பட்டத்திற்காக தெரிவு செய்யும் போது தகைமை பெறும் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய போதிலும் அவ்வாறான பரீட்சையொன்று நடாத்தப்படாமல் 07 பட்டதாரி அபேட்சகர்கள் | நிலைபேறான சுற்றுலா முதுமாணி பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக முதலாவது தடவையாக மாணவர்கள் தெரிவு செய்யும் போது அத்தெரிவுச் செயற்பாட்டில் பின்னரும் சில குறைபாடுகள் இடம் பெற்றுள்ளதாக | அனுமதி நடைமுறைக்கு இணங்க பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும். |

பாடநெறிக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

.

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உளவியல், தத்துவம் மற்றும் கல்வி Phycology, Philosophy, and Education) ஆகிய பாடநெறிகளுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த மாணவர் எண்ணிக்கை 2019 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் போது 64 சதவீதத்தினளாலும் மீளாய்வாண்டின் போது 69 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. அவ்வாறே வெளிநாட்டு மாணவர் ஆட்சேர்ப்பும் 2019 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் போது 55 சதவீதத்தினாலும் மீளாய்வாண்டின் போது 58 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது. | காணப்பட்ட கொரோனா நிலைமை காரணமாக மாணவர்களின் பாடநெறிக் காலத்தை நீடிப்பதற்கு நேர்ந்த காரணத்தினால் 2021 ஆம் ஆண்டில் குறித்த பாட நெறிகளுக்காக மாணவர்களை அனுமதிக்க முடியாமை மற்றும் வெளிநாட்டு மாணவர்கள் நிறுவகத்தின் பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக பதிவுசெய்தல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக | செயற்படுத்தக்கூடிய வருடாந்த செயல்நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து அத்திட்டத்திற்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பிரான்ஸ் உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் செட்ரிக் (SEBRIC) செயற்திட்டத்திற்காக முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் ரூபா 9,444,126 கிடைத்திருந்த போதும் அதில் ரூபா 8,986,126 தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறைப்பயன்பாட்டில் இருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் காணப்பட்ட தொற்று நிலைமை காரணமாக வெளிக்கள நிகழ்ச்சிகளை மேற்கொள்ள முடியாமை யால் அப்பணம் குறைவாக பயன்படுத்தப்பட்டது. | நிதியத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிதியை குறித்த செயற்பாடுகளுக்காக ஆக்கபூர்வமாகவும் செயற்திறனான முறையிலும் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) வெளிநாட்டு மாணவர்களுக்காக விடுதி வசதிகளை வழங்கு வதற்காக கட்டிடத் தொகுதி யொன்றை அமைப்பதற்கு சீனாவின் மினான் பௌத்த பல்கலைக் கழகத்திடமிருந்து 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது மானியமாக கிடைத்திருந்த ரூபா | நிறுவகத்தினால் இப்பணத்தை மாணவர் விடுதிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்த தீர்மானிக்கப் பட்டிருந்ததுடன் தற்போது உரிய கட்டிடத்தை நிர்மாணிப்பது தொடர்பாக | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| 6,699,195 தொகையை அதற்காக பயன்படுத்தாமல் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | ஆரம்ப வேலைகளை தயார்செய்யப்படும் வரை அப்பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்துள்ளதாக | |

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 4,666,843 ஒப்பந்த பெறுமதியான நிறுவகத்தின் நுழைவு வீதியை விரிவுபடுத்து வதற்கும் வாகன நிறுத்தி வைப்பதற்கான கராஜ் ஒன்றும் மதிலொன்றையும் நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019 மே மாதம் 27 ஆந் திகதி அளவில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மேலதிக வேலைகளுக்காக கொடுப்பனவிற்கான அங்கீகாரம், பணக் கொடுப்பனவு தாமதமானமை மற்றும் 2020 ஆம் ஆண்டில் நாட்டில் காணப்பட்ட சீரற்ற நிலைமை யால் இச்செயற்பாடுகளை குறித்த திகதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்ததாக | உடன்படிக்கை செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் ஒப்பந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவை தேவைப்பாட்டின் பேரில் அங்கீகரிகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்யாமல் அங்கீகரிகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பதவியொன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் 16 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 7,263,351 தொகை சம்பளம் மற்றும் படிகளாக வழங்கப்பட்டிருந்தன. | பதவிகளை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர் அப்பதவிகளுக்காக நிரந்த பதவியணயினரை ஆட்சேர்ப்பு செய்யும் வரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2016/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் மேற்படி ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக | தேவைப்பாட்டின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை திருத்தம் செய்து எதிர்வரும் செயற்பாடுகளை எடுத்தல் வேண்டும். |